## வகுப்பு - 7 - விலங்கியல், 6. உடல் நலமும் சுகாதாரமும்

**பயிற்சி வினாக்கள்:**

1. நல் உடல் நலத்தை பேண _______ ஐப் பின்பற்ற வேண்டும்.

(1) சுத்தம் (2) சுகாதாரம் (3) உடல்நலம் (4) செல்வம்

2. சமூக சுகாதாரம் என்பது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

(1) மூடிய வடிகால்கள் (2) திறந்த வடிகால்கள்

(3) பிரிக்கப்படாத குப்பைகள் (4) தொற்று நோய்கள்

3. டெங்கு காய்ச்சல் _______ வைரஸால் தோற்றுவிக்கப்படுகிறது.

(1) ஏடிஸ் எஜிப்டி (2) விப்ரியோ காலரே

(3) DEN -1, 2 (பிளேவி) (4) சால்மோனெல்லா டைபி

4. ஈறுகளில் இரத்தக் கசிவு _______ வைட்டமின் குறைபாட்டினால் ஏற்படுகிறது.

(1) வைட்டமின் A (2) வைட்டமின் B (3) வைட்டமின் C (4) வைட்டமின் D

5. புகையிலையை மெல்லுவதால் ஏற்படுவது _______.

(1) இரத்த சோகை (2) பற்குழிகள் (3) காசநோய் (4) நிமோனியா

6. கண்கள் மூலமாக _______ சதவீதம் உணர்வுகளை பெறுகிறோம்.

(1) 50% (2) 80% (3) 70% (4) 60%

7. மெல்லும் மற்றும் ருசிக்கும் செயலை எவ்வாறு அழைக்கலாம்?

(1) கருவண்ணம் (2) ப்ளாசிங் (3) மாஸ்டிகேசன் (4) சுவை அரும்புகள்

8. பொருத்துக.

(i) ஈறுகளில் இரத்தக் கசிவு - a. புகையிலை மெல்லுதல்

(ii) புறத்திசு நோய் - b. பல் துலக்குதல்

(iii) பற்சிதைவு - c. சிட்ரஸ் பழங்கள்

(iv) பற்களில் காணப்படும் பாக்டீரியாக்கள் - d. அமிலங்களை உற்பத்தி செய்கின்றன

(1) i - a ii - d iii - b iv - c (2) i - c ii - a iii - b iv - d

(3) i - d ii - a iii - b iv - c (4) i - c ii - b iii - c iv - d

9. ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றாக வாழும் மக்களை _______ என அழைக்கிறோம்.

(1) மக்கள் தொகை (2) சமூகம் (3) உயிர்கோளம் (4) வாழ்க்கை

LIVEWORKSHEETS

10. கண்கள், உலகினைக் காணப் பயன்படும் _______ கருதப்படுகின்றன.

(1) உணர்வுகள் (2) ஒளி (3) சாளரங்கள் (4) கருவி

11. பொருத்துக

(i) மாலைக்கண் நோய் - a. நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கண்சொட்டு மருந்து

(ii) இளம் சிவப்புக்கண் நோய் - b. வடிகட்டிகளுடன் கூடிய கண்ணாடி

(iii) வண்ணக் குருட்டுத் தன்மை - c ஆண்டி ஆக்ஸிடண்ட் வைட்டமின்கள்

(iv) வெண் படல அழற்சி - d. வைரஸ் மற்றும் பாக்டீரியாவால் உண்டாகிறது

(1) (i) - c (ii) - a (iii) - b (iv) - d (2) (i) - b (ii) - c (iii) - a (iv) - d

(3) (i) - d (ii) - b (iii) - a (iv) - c (4) (i) - c (ii) - b (iii) - a (iv) - d

12. தலைமுடியின் ஆரோக்கியம் உடலின் _______ நிலையைப் பிரதிபலிக்கிறது.

(1) சுகாதாரம் (2) ஆரோக்கியம் (3) ஊட்டச்சத்து நிலை (4) சுத்தமான

13. காச நோய் _______ என்னும் நுண்கிருமியால் உருவாகிறது.

(1) வைரஸ் (2) பாக்டீரியா (3) பூச்சுகள் (4) விப்ரியோ காலரே

14. பின்வருவனவற்றுள் காலரா, டைபாய்டு பரவக் காரணமான காரணி எது?

(1) உணவு (2) பூச்சிகள் (3) மருந்துகள் (4) அசுத்தமான நீர்

15. காசநோயை உருவாக்கும் பாக்டீரியா _______.

(1) விப்ரியோ காலரே (2) மைக்கோ பாக்டீரியம் டியூபர்குலே

(3) சால்மோனெல்லா டை∴பி (4) ஹெபாடிட்டிஸ் பி

16. பொருத்துக

(i) ரேபிஸ் - a. மஞ்சள் நிற சிறுநீர்

(ii) காலரா - b. கால்தசை

(iii) காசநோய் - c. ஹைட்ரோ போபியா

(iv) ஹெபாடிட்டிஸ் - d. மைக்கோ பாக்டீரியம்

(1) (i) - a (ii) - b (iii) - c (iv) - d (2) (i) - a (ii) - c (iii) - d (iv) - b

(3) (i) - d (ii) - b (iii) - c (iv) - a (4) (i) - c (ii) - b (iii) - d (iv) - a

17. கூற்றுகளை ஆராய்க.

கூற்று (i) : வயிற்றுப்புண் ஒரு தொற்றுநோய்.

கூற்று (ii) : சின்னம்மை லூகோடெர்மா என்றும் அழைக்கப்படுகிறது.

(1) கூற்று i சரி, கூற்று ii தவறு (2) கூற்று i தவறு, கூற்று ii சரி

LIVEWORKSHEETS

(3) கூற்று i சரி, கூற்று ii சரி (4) கூற்று i தவறு, கூற்று ii தவறு

18. ஒப்புமை தருக

முதல் நிலைத் தீக்காயம் : மேற்புறத்தோல் : : இரண்டாம் நிலை தீக்காயம் : ?

(1) உட்தோல் (2) BCG

(3) தோல் (டெர்மிஸ்) ஒட்டுதல் (4) உட்தோல் (டெர்மிஸ்)

19. வாரிசெல்லா ஜோஸ்டர் என்ற வைரஸ் ஏற்படுத்தும் நோய் ______.

(1) காலரா (2) தட்டம்மை (3) ரேபிஸ் (4) டைபாய்டு

20. ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிராக தடுப்பாற்றலை உருவாக்கி அந்த நோய்க்கு எதிராக போராடுவதற்கு நம் உடலை தயார் செய்தலே ______ ன் நோக்கமாகும்.

(1) மருந்துகள் (2) தடுப்பூசி (3) நோய்கள் (4) சிகிச்சை

21. ______ இறப்பை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான தொற்று நோயாகும்

(1) சின்னம்மை (2) ரேபிஸ் (3) காலரா (4) தட்டம்மை

22. டைபாய்டு காய்ச்சலை உருவாக்கும் பாக்டீரியா ______.

(1) சால்மோனெல்லா டைபி (2) விப்ரியோ காலரே

(3) ஹெபாடிட்டிஸ் வைரஸ் (4) மைக்கோபாக்டீரியம் டியூபர்குலே

23. அனோரெக்லியா என்பது எந்த உணர்வைக் குறிக்கிறது?

(1) தாகம் (2) பசி (3) கோபம் (4) பசியின்மை

24. நாக்கின் மீது வெள்ளைக் கோடுகள் உருவாவது எந்த நோயின் அறிகுறியாக கருதலாம்?

(1) மஞ்சள் காமாலை (2) காலரா (3) டைபாய்டு (4) தட்டம்மை

25. தட்டம்மை நோயினை ______ என்றும் அழைக்கலாம்.

(1) தொற்றா நோய் (2) ரேபிஸ்

(3) ஊட்டச்சத்தின்மை (4) வாரிசெல்லா

26. ஹைட்ரோபோபியா என்பது நம் உடலின் எந்த உணர்வைக் குறிக்கிறது?

(1) நீரைக் கண்டு பயம் (2) நெருப்பைக் கண்டு பயம்

(3) காற்றைக் கண்டு பயம் (4) பசி உணர்வு

27. தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்க இதில் எந்த தடுப்பூசி குழந்தை பருவத்தில் செலுத்தப்படுவதில்லை?

(1) BCG (2) போலியோ (3) DOT (4) MMR

LIVEWORKSHEETS

28. பின்வருவனவற்றுள் தொற்றுநோய் எது?

(1) வாத நோய் (2) ஆஸ்துமா (3) காலரா (4) ஒவ்வாமை

29. மெலனின் நிறமி இழப்பினால் ஏற்படும் நோயின் பெயர் ______.

(1) ஐகோடெர்மா (2) இரத்த சோகை (3) ஒவ்வாமை (4) பக்கவாதம்

30. ஊட்டச்சத்து குறைபாட்டால் ______ நோய் உருவாவதில்லை.

(1) இரத்த சோகை (2) மாலைக்கண் நோய்

(3) மராஸ்மஸ் (4) பக்கவாதம்

31. உடல் பாகங்கள் தேய்மானம் ஏற்படுவதால் இந்த நோய் உருவாகின்றது?

(1) வாத நோய் (2) மாரடைப்பு (3) வயிற்றுப்புண் (4) கண்புரை

32. குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்கு பதிலாக வேறு உணவுகளை கொடுப்பதால் உருவாகும் நோய்

(1) வயிற்றுப்போக்கு (2) இரத்த சோகை

(3) சீரோப்தால்மியா (4) இருமல்

33. இரத்த சோகை, கெலாக்ரா, மாலைக்கண்நோய், சீரோப்தால்மியா, முன் கழுத்துக் கழலை இவையெல்லாம் ஏற்படக் காரணம் ______.

(1) உடல் பாகங்களில் தேய்மானம் ஏற்படுதல்

(2) தீங்கு விளைவிக்கக்கூடிய வெளிப்புறக் காரணிகள் உடலில் நுழைதல்

(3) உடலில் நுண்ணூட்டத் தனிமங்கள் குறைவுபடுதல்

(4) ஊட்டச்சத்தின்மை

34. தோல் ஒட்டுதல் சிகிச்சை எந்த தீக்காயங்களுக்கு தேவைப்படுகிறது?

(1) முதல் நிலை தீக்காயங்கள் (2) இரண்டாம் நிலை தீக்காயங்கள்

(3) மூன்றாம் நிலை தீக்காயங்கள் (4) மின்சார தீக்காயங்கள்

35. ஹெபாடிட்டிஸ் வைரஸ் தோற்றுவிக்கும் நோய் ______.

(1) டைபாய்டு (2) மஞ்சள் காமாலை

(3) காலரா (4) ஆஸ்துமா

LIVEWORKSHEETS